023

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 06
இறுதிப்பரீட்சை – 2008
**LWU 3326/4326**– தீங்கியல்சட்டம்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி: 18.04.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12..30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 'எதிராளி கவனக் கடப்பாட்டை மீறியிருக்கின்றானா எனும் வினாவானது சட்டம் சம்பந்தமானது, நிகழ்வு சம்பந்தப்பட்டதன்று: சட்ட நிர்மாணத்திற்கு நியாயமான நபர் என்பதே எதிராளியால் தேவப்படுத்தப்படும் நியமமாகும்.'

   ஆங்கிலச்சட்டம் மற்றும் உரோமன் டச்சுச்சட்டம் ஆகியவற்றின் நிலையில் கவனையீனம் தொடர்பான சட்டத்தில் குறிப்பிடும் ஆலோசனையை தந்து மேற் தரப்பட்ட கூற்றை பகுப்பாய்வு செய்க.

2. மூன்று பிள்ளைகளின் தயான ரூபா கோல்டன் மெக்ஸ் தனியார் வைத்தியசாலையில் மகளீர் தொடர்பான சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணர் வைத்தியர் சில்வா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கருத்தடை சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார். சிகிச்சை நடபடிமுறை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமையால் சத்திர சிகிச்சைக்கு பின்னர் கருவுறுதலை கட்டுப்படுத்த எவ்வித தடைசெய்யும் நடவடிக்கைகளையும் செய்யாதிருக்கும்படி அவள் மேலும் அறிவுறுத்தப்பட்டாள். ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவள் கருவுற்றாள். எப்படியிருப்பினும் ஆரோக்கியமான ஆண் குழந்தையான நான்காவது குழந்தையின் ஜனனம் தொடர்பில் ரூபாவும் அவளது கணவனும் மகிழ்ச்சியுற்றனர்.

   (அ) குழந்தை பிரசவத்தின் போது ஏற்பட்ட மருத்துவ செலவுகளுக்கு மேலதிகமாக நான்காவது குழந்தையை வளர்த்தெடுப்பதற்கான செலவினை வைத்தியர் சில்வாவிடம் இருந்து கோரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என ரூபாவுக்கு அறிய வேண்டியுள்ளது. ரூபாவுக்கு அறிவுரை செய்க.

   (ஆ) இவ்விடயத்தில் கருவின் ஆதி உருவை(embryo) அழிக்காது விடுவதற்கான தீர்மானம் ***novus actus interveniens*** புதுச்செயலின் இடைநுழைவுக்கு ஒத்ததாகும் என நீர் கருதுகிறீரா? உமது விடையை சம்பந்தப்பட்ட தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

LIBRARY

3. மத்திய மாகாணத்திலுள்ள வனப்பூங்காவில் யானைகளைப் பார்ப்பதற்கு குடும்ப சுற்றுளா ஒன்றை நுவான் ஏற்பாடு செய்தான். பூங்காவிற்குள்ளேயே உள்ள ஒரு பங்களாவை அவன் பதிவு செய்தான். யானைகள் அத்துமீறி நுழைவதைத் தவிர்ப்பதற்காக மின்வேலியால் பங்களா சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. ‘ஆபத்து! மின் வேலையை கடக்காதீர்’ என குறிக்கும் ஓர் அறிவித்தல் அங்கே இருந்தது. நுவானின் ஆறு வயது பையனான சீனூ அங்கிருந்த மயிற்குழாத்தை பார்ப்பதற்கு மின் வேலியை கடக்க முயன்றான். மின்சார தாக்கத்திற்கு உள்ளாகி அவன் சுயநினைவின்றி கீழே விழுந்ததுடன் விரைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டான். சுயநினைவிழந்திருக்கும் அவளது மகனைக்கண்டு சீனூவின் தாய் மன அதிர்ச்சியால் (post traumatic disorder) அவதியுற்றாள்.

சீனூவுக்கும் அவனது தாய்க்கும் ஏற்பட்ட சேதத்துடன் தொடர்புறுத்தி பூங்கா அதிகாரிகளின் தீங்கியல் பொறுப்புடைமையை ஆராய்க.

4. கந்துரட்ட பல்கலைக்கழத்தின் ஆண்பிள்ளைகளுக்கான விடுதியான ‘கித்யா’வில் ஸ்ரீ விடுதிக்காப்பாளராக வேலைக்கமர்த்தப்பட்டான். புதுமுக மாணவனான கபில சில சிரேஷ்ட மாணவர்களால் மோசமாக பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக பலமுறை ஸ்ரீக்கு முறைப்பாடு செய்தான். இந் நிலைமையைத் தவிர்க்க நடவடிக்கையெடுக்க ஸ்ரீக்கு முடியாமல் போய்விட்டது. ஒரு நாள் கபில கடுமையான பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டான். உட்காயங்கள் காரணமாக கபில ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அத்துடன் அவனால் தனது கல்வியைத் தொடர முடியாதுள்ளதாகவும் தெரியவந்தது. அவன் அவனது குடும்பத்தில் மூத்த மகனாவான். பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத்தொடர கபிலவின் பெற்றோர் விரும்புகின்றனர். அவர்களுக்கு அறிவுரை செய்க, அத்துடன் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தீங்கியல் நடவடிக்கை ஒன்றை அவர்களால் வெற்றிகரமாக கொண்டுவர முடியுமா எனவும் ஆலோசிக்குக.

5. முன்னாள் அழகு ராணியான பிங்கி(Pinky) எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் போட்டியிடவிருக்கின்றாள். அவள் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளர். என்பதுடன் விஷன் ரெலிவிஷன் செட்ஸ் ஆல் ஆதரவளிக்கப்பட்ட சில விளம்பரங்களிலும் அவள் தோன்றினாள். தேர்தலுக்கு முன்னைய நாள் ‘சமூகசேவையாளரின் உண்மை வாழ்க்கை’ எனும் தலைப்பின் கீழ் ஒரு பெண்ணின் திரிபுபடுத்தப்பட்ட பல புகைப்படங்கள் உள்ளடங்கலான ஒரு மின் அஞ்சலை ரூபா பெறுகின்றாள். புகைப்படங்களில் உள்ள பெண் யார் என்பதை அறிந்துகொள்வதற்காக அவள் அந்த மின்னஞ்சலை தன் காதலனான சமனுக்கு அனுப்புகிறாள். அந்த நபர் பிங்கி என்பதனை அறிந்த சமன் அந்த மின்னஞ்சலை தனது முகவரி புத்தகத்திலுள்ள அனைத்து முகவரியாளர்களுக்கும் அனுப்புகின்றான். இந்த மின்னஞ்சல் காரணமாகத்தான் தான் தேர்தலில் தோல்வியுற்றதாக பிங்கி கருதுகிறாள்.

மேலே குறித்துக்காட்டப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் தனக்கேதேனும் தீங்கியல் நிவாரணம் உண்டா என அறிந்து கொள்ள பிங்கி விரும்புகிறாள். தீர்ப்புச்சட்டத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்க.